# ஆகஸ்ட்– 26 –பொதுக்கால21ம் ஞாயிறு

**“நீங்களும் போய் விட நினைக்கிறீர்களா?”**
**( யோவா 6:67)**

## முதல் வாசகம் : யோசுவா24 : 1 – 2, 15 – 18

செக்கேமில் யோசுவா இஸ்ரயேலின் எல்லாக் குலங்களையும் ஒன்று கூட்டினார். இஸ்ரயேலின் முதியோர்களையும் தலைவர்களையும் நடுவர்களையும் அதிகாரிகளையும் அழைத்தார். அவர்கள் கடவுள் முன்னிலையில் ஒன்றுகூடினர்.யோசுவா எல்லா மக்களுக்கும் கூறியது ”இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார் ”முற்காலத்தில் ஆபிரகாம், நாகோர் ஆகியோரின் தந்தை தேரா உட்பட்ட உங்கள் மூதாதையர் நதிக்கு அப்பால் வாழ்ந்தபொழுது அவர்கள் மற்ற தெய்வங்களுக்கு ஊழியம் செய்தனர்.ஆண்டவருக்கு ஊழியம் புரிவது தீயது என்று உங்கள் பார்வைக்குத் தோன்றினால், உங்கள் மூதாதையர் நதிக்கு அப்பால் பணிந்து வந்த தெய்வங்களுக்கோ, உங்கள் நாட்டில் உங்களுடன் வாழும் எமோரியரின் தெய்வங்களுக்கோ இவர்களுள் யாருக்கு ஊழியம் செய்வீர்கள் என்பதை நீங்களே இப்போது முடிவு செய்யுங்கள். ஆனால் நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்.மக்கள் மறுமொழியாக, ”ஆண்டவரைக் கைவிட்டு வேற்றுத் தெய்வங்களை வணங்குவது எங்களிடத்தே அறவே நிகழாதிருப்பதாக!ஏனெனில் எங்கள் கடவுளாகிய ஆண்டவர் எங்களையும் எங்கள் மூதாதையரையும் அடிமைத்தன வீடாகிய எகிப்து நாட்டிலிருந்து வெளியே கொண்டுவந்தார். எங்கள் கண்முன் இப்பெரிய அடையாளங்களைச் செய்தார். நாங்கள் நடந்து வந்த எல்லா வழிகளிலும் நாங்கள் கடந்து வந்த மக்களிடையிலும் எங்களைக் காத்தருளினார். நாங்களும் ஆண்டவருக்கு ஊழியம் புரிவோம். ஏனெனில் அவரே எங்கள் கடவுள்” என்றனர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எத்துணை இனியவர் என்று
சுவைத்துப் பாருங்கள்.

## இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 5 : 21 – 32

சகோதர சகோதரிகளே! கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள்.திருமணமான பெண்களே, ஆண்டவருக்குப் பணிந்திருப்பதுபோல உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பதுபோலக் கணவர் மனைவிக்குத் தலையாய் இருக்கிறார். கிறிஸ்துவே திருச்சபையாகிய உடலின் மீட்பர்.திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பதுபோல, மனைவியரும் தங்கள் கணவருக்கு அனைத்திலும் பணிந்திருக்க வேண்டும்.திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தி, அதற்காகத் தம்மையே ஒப்புவித்தார்.வார்த்தையாலும் நீரினாலும் அதனைக் கழுவித் தூயதாக்குமாறு இவ்வாறு செய்தார்.அத்திருச்சபை, கறை திரையோ, வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் தம்முன் விளங்குமாறு இப்படிச் செய்தார்.அவ்வாறே கணவர்களும் மனைவியரைத் தம் சொந்த உடல் எனக்கருதி அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தம் மனைவியின்மீது அன்பு கொள்கிறவர், தம்மீதே அன்பு கொள்கிறவராவார்.தம்முடைய உடலை எவரும் வெறுப்பதில்லை. அதைப் பேணிவளர்க்கிறார். அவ்வாறே, கிறிஸ்துவும் திருச்சபையைப் பேணிவளர்த்து வருகிறார்.ஏனெனில் நாம் அவரது உடலின் உறுப்புகள்.”இதனால் கணவர் தம் தாய் தந்தையை விட்டுவிட்டு தம் மனைவியுடன் ஒன்றித்திருப்பார் இருவரும் ஒரே உடலாயிருப்பர்” என மறைநூல் கூறுகிறது.இதில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன்.

## நற்செய்தி : யோவான் 6 : 60 – 69

அக்காலத்தில் இயேசு சொல்வதைக் கேட்டு அவருடைய சீடர் பலர், ”இதை ஏற்றுக்கொள்வது மிகக்கடினம் இப்பேச்சை இன்னும் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?” என்று பேசிக்கொண்டனர். இதுபற்றித் தம் சீடர் முணுமுணுப்பதை இயேசு உணர்ந்து அவர்களிடம், ”நீங்கள் நம்புவதற்கு இது தடையாய் இருக்கிறதா? அப்படியானால் மானிடமகன் தாம் முன்பு இருந்த இடத்திற்கு ஏறிச் செல்வதை நீங்கள் கண்டால் அது உங்களுக்கு எப்படி இருக்கும்?வாழ்வு தருவது தூய ஆவியே் ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது. நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.அப்படியிருந்தும் உங்களுள் சிலர் என்னை நம்பவில்லை” என்றார். நம்பாதோர் யார், யார் என்பதும் தம்மைக் காட்டிக்கொடுக்கவிருப்பவன் யார் என்பதும் இயேசுவுக்குத் தொடக்கத்திலிருந்தே தெரிந்திருந்தது.மேலும் அவர், ”இதன் காரணமாகத்தான் “என் தந்தை அருள் கூர்ந்தால் அன்றி யாரும் என்னிடம் வர இயலாது” என்று உங்களுக்குக் கூறினேன்” என்றார்.அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரை விட்டு விலகினர். அன்றுமுதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை.இயேசு பன்னிரு சீடரிடம், ”நீங்களும் போய் விட நினைக்கிறீர்களா?” என்றுகேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, ”ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.நீரே கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். அதை நம்புகிறோம்” என்றார்.

**தியானம்:** வாழ்வுதரும் வார்த்தையாக இருக்கின்றார் யேசு. அவரின் வார்த்தையின்படி வாழ நாம் அழைக்கப் பட்டுள்ளோம். ஆனால் நாம் இன்று பலரின் வார்த்தைகளை நம்பி ஏமாந்து விடுகின்றோம். நிலைத்து நிற்க முடியாமல் இருக்கின்றோம். யேசுவின் வார்த்தைகளை கேட்ட பலர் அவரை விட்டு விலகி சென்றதாக இன்றைய நற்செய்தியில் நாம் பார்க்கின்றோம். யேசு சொன்னதை அவர்களால் ஏற்க முடியவில்லை. அதனால் அவரை விட்டு விலகி சென்றார்கள். இன்றும் பலர் இப்படி செய்துகொண்டிருக்கின்றார்கள். தாம் சார்ந்த கட்சியை விட்டு விலகுவதும், குழுவை விட்டு விலகுவதும் உண்டு. பணத்திற்காக, அந்தஸ்த்திற்காக, பதவிக்காக விலகி செல்பவர்களும் உண்டு. குடும்ப சுமைகளை ஏற்க முடியாமல் விலகுபவர்களும் உண்டு. இன்றைய வாசகங்கள் நாம் யேசுவில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதனை சுட்டி காட்டுகின்றன. நிலையில்லா உலகில் நிலையற்ற செல்வத்தை நாடி ஒடுகின்றோம். அதனால் விரக்தி, தனிமை போன்றவற்றை அனுபவிப்பவர்கள் அதிகம். ஒருவரை ஒருவர் அன்பு செய்ய மறுக்கின்றோம். குடும்பங்களில் ஏற்படும் பிளவிற்கு இவைதான் காரணம். பிள்ளைகளை சரியாக வளர்க்காமல் விட்டு விட்டு வளர்ந்த பின்பு அவர்கள் செய்யும் காரியத்தால் மன வேதனைப்படுபவர்களும், தற்கொலை செய்பவர்களும் உண்டு. ஆனால் நற்செய்தியில் கூறப்படுவதுபோல் கடவுளின் வார்த்தையில் நிலைத்து நின்று, அதன்படி வாழும்போது நம்மால் எந்த சவாலையும் இலகுவாக சந்திக்க முடியும். எனவே கடவுள் நம்மை அன்பு செய்வதுபோல் நாமும் கணவனை, மனைவியை, பெற்றோரை, பிள்ளைகளை, சகோதர சகோதரிகளை அன்பு செய்து வாழ்வோம். எந்த துன்பம் வந்தாலும் கடவுளை விட்டு விலகாமல் அவரில் நிலைத்திருப்போம். அப்போது முடிவில்லா நிலை வாழ்வை எம்மால் கண்டடைய முடியும்.